**அனர்த்த முகாமைத்துவ நிலையம் - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது அனர்த்த முகாமைத்துவ நிலையத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை

பயன்படுத்துதல் மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிலையம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிலையத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டு தற்போது பயன்படுத்தப்படுகின்ற ரூபா 486.8 மில்லியன் கிரயமான 04 சொத்து | எதிர்வரும் நிதியாண்டுகளின் போது பயன்பாட்டுக்கு எடுக்கக் கூடிய சொத்துக்களை | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| வகைகளின் பயன்தரு ஆயுட்காலத்தை மீண்டும் மீளாய்வுசெய்து இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீண்டும் பெறுமதியிடுவதற்கும், பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத சொத்துக்களை அகற்றுவதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 38.98 மில்லியன் பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 66.72 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் நிதிவிளைவுகளில் ரூபா 27.74 மில்லியன் அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் செலவினம் வீழ்ச்சியடைந்து சென்றமை இந்த அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2010 ஆம் ஆண்டு முதல் நிலையத்தின் தலைமை அலுவலக கட்டிடம் ரூபா 1,034.4 மில்லியன் செலவில் வளிமண்டலவியல் திணைக்களத்திற்குரிய காணியில் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் அந்தக் காணியின் சட்டரீதியான உரித்து பெற்றுக்கொள்வதற்கு இதுவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அனர்த்த முகாமைத்துவ பிரிவினால் அரச பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சின் பெயரில் கட்டிடம் அமைந்துள்ள இந்தக் காணியை கையேற்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | இந்தக் கட்டிடம் மற்றும் அந்தக் காணியை சட்டரீதியாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கு கையேற்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தயாரித்து பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் மனிதவள கொள்கை தயாரிக்கும் செயற்பாடுகள் 2022 மார்ச் 30 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | சில திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் மிகவும் பொருத்தமான திட்டம் என்ற செயல் நடவடிக்கை கட்டமைப்பு மற்றும் ஏனைய இடர் ஆபத்துக்களை குறைக்கும் மரபுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்ட திட்டத்தை எதிர்காலத்தில் | தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டம் மற்றும் மனித வள கொள்கைகள் விரைவாக தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | சமர்ப்பிப்பதற்கான செயற்பாடுகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது | |
| (இ) | 2005 இன் 13 ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவ சட்டத்தை திருத்துவதற்கு 2008 ஆம் ஆண்டு முதல் செயற்பட்டிருந்த போதிலும் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் உரிய திருத்தங்கள் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | 2005 இன் 13 ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவ சட்டத்தை திருத்துதல் அனர்த்த முகாமைத்துவ பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட பணியாக இருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். | சட்டத்தில் திருத்தங்களை மேற்கொண்டு பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |

### 3.2 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 11.8 மில்லியன் பெறுமதியான களப் பிரதேசங்களுக்கான மடிக்கும் கட்டில்களின் பெறுகைகள் தொடர்பான பரீட்சிப்பின் பிரகாரம் 1000 கட்டில்களில் 552 கட்டில்களை வழங்குவதற்கு 83 நாட்கள் தாமதமடைந்திருந்த போதும் உடன்படிக்கையின் பிரகாரம் தாமத தண்டப்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மிகுதி 448 கட்டில்களை வழங்குதல் தாமதமடைந்தமைக்காக ஏதாவது தாமதக் கட்டணத்தை அறவிட்டு மிகுதி பணத்தை செலுத்துவதற்கு பெறுகைக்குழு தீர்மானித்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என தயவுடன் அறியத்தருகின்றோம். | பெறுகைகள் வழிகாட்டிக் கோவைக்கு இணங்க செயற்படல் வேண்டும். |

### 3.3 பதவியணியினர் நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலையத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி உத்தியோகத்தர்கள் 465 ஆக இருந்த போதிலும் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற பதவியணியினர் 302 ஆனமையால் வெற்றிடங்கள் 163 ஆக இருந்தமை | 2021.12.31 ஆந் திகதி வரையில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 465 ஆக இருந்ததுடன் சேவையில் | பதவியணியினர் வெற்றிடங்களை நிரப்புவதற்கும், அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை திருத்தி கொள்வதற்கும் |

| | | |
|---|---|---|
| வெளிப்படுத்தப்பட்டது. இந்த வெற்றிடங்களில் இரண்டாம் நிலையில் வெற்றிடங்கள் 134 ஆக இருந்ததுடன் சிரேஷ்ட நிலையில் வெற்றிடங்கள் 25 ஆகவும், மூன்றாம் நிலையில் வெற்றிடங்கள் 04 ஆகவும் இருந்தன. | ஈடுபட்டிருக்கின்ற பதவியணியினர் 302 ஆகவும், வெற்றிடங்கள் 163 ஆகவும் இருந்தன. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நிறுவனத்தால் மண்சரிவு செயற்திட்டத்திற்காக ரூபா 350 மில்லியன் கிடைத்திருந்ததுடன் நிதி செயலாற்றலில் ரூபா 139.29 மில்லியன் ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிதியேற்பாடுகளில் 50 சதவீதத்திற்கு குறைவான அளவில் செலவிடப்பட்டிருக்கும் போது செயற்திட்டத்தின் பௌதீக செயல்முன்னேற்றம் 75 சதவீதமாக போதியளவான மதிப்பீடின்றி காண்பிக்கப்பட்டிருந்தது. | மதிப்பீடுகளில் காணப்பட்ட பிரச்சினைகளின் பிரகாரம் செயற்திட்டத்தை திட்டமிடப்பட்ட பிரகாரம் அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தமையால் 72 சதவீத பௌதீக செயலாற்றல் பெறப்பட்டிருந்தது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் பல்நோக்கு தந்திரோபாய ஆபத்துக்களை மதிப்பிடுவதற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 10 மில்லியனை பயன்படுத்தி 11 செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் இந்த செயற்திட்டங்களில் எதிர்பார்க்கப்பட்டிருந்த செயற்பாடுகள் சரியான பிரகாரம் நிறைவேற்றப்படாமையினால் எதிர்பார்த்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்தது. | இந்த செயற்திட்டங்களை ஆரம்பிக்கும் ஆரம்ப செயற்பாடுகள் களப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட வேண்டியவையாக இருந்தமையால் நாட்டில் காணப்பட்ட தொற்றுநோய் நிலைமையின் அடிப்படையில் அவற்றை ஆரம்பிப்பதற்கு முடியாதிருந்தது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் பயிற்சி பிரிவின் மூலம் ரூபா 25 மில்லியன் செலவில் 557 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அதில் 197 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மாத்திரம் அமுல்படுத்தப்பட்டிருந்தது. அதனால் ஒதுக்கப்பட்ட செலவினத்தின் சேமிப்பை மீண்டும் அமைச்சிற்கு மீளளிப்பு செய்யவேண்டி ஏற்பட்டிருந்தது. | மக்கள் பங்களிப்புடனான பயிற்சி மற்றும் அறிவுறுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துவதற்கு முடியாமையால் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் இடைக்கால முகாமைத்துவ குழுவின் அங்கீகாரத்தின் கீழ் ரூபா 15 மில்லியன் கட்டமைப்புரீதியான அனர்த்த ஆபத்துக்களை குறைக்கும் செயற்பாடுகளுக்காக 2021.08.10 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தது. எனினும், காணப்பட்ட நிலைமையின் இடையே அந்த கட்டமைப்புரீதியான அனர்த்த ஆபத்துக்களை குறைக்கும் செயற்திட்டத்தையும் அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |